**கரையோரப் பாதுகாப்பு வெகுமதி நிதியம் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கரையோரப் பாதுகாப்பு வெகுமதி நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவுக் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை *இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு* இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன்

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச்

சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04ஆம் இலக்க வழிகாட்டலின் பிரகாரம் நியதிச்சட்ட | நிதிக்கூற்றுக்களைப் பரீட்சிப்பவர்களுக்கு முறையான வகையில் தகவல்களைப் பெறக்கூடிய வகையில் | முறையான அடிப்படைப் பதிவேடுகளைச் சார்ந்து கொடுக்கல்வாங்கல்கள் ஆரம்பப் பதிவேடுகளிலும் |

| | | |
|---|---|---|
| நிதியத்தின் கொடுக்கல்வாங்கல்கள் முறையான மூலப்பதிவேடுகளை அடிப்படையாகக் கொண்டு மூல ஏடுகள் மற்றும் பேரேட்டுக் கணக்குகளில் பதியப்பட்டு இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் தொடர்பான கூற்று மற்றும் நிதிப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், நிதியத்திற்காக பேரேட்டுக் கணக்குகள் பேணப்படாதிருந்ததுடன் காசு அடிப்படை பின்பற்றப்பட்டு வருமானச் செலவினம் வகைப்படுத்தப்படாது காசேட்டின் சகல பெறுவனவும் கொடுப்பனவும் ஒவ்வொன்றாக உள்ளடக்கப்பட்டு வருமானச் செலவினக் கணக்கு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நிதியத்திற்கான பேரேடுகளை பேணுவதற்கு எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்படும். | பேரேடுகளிலும் பதிவு செய்யப்பட்டு இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீதிமன்றத்தால் அறவிட்டு அனுப்பிவைக்கப்படும் தண்டப்பணத்தில் நிர்வாகச் செலவினத்திற்காக 5 சதவீதத் தொகையில் நிதிய நடவடிக்கைகளிற்காக திணைக்களத்தால் ஏற்கப்படும் உட்கட்டமைப்பு வசதிகள், காகிதாதிகள் மற்றும் ஏனைய செலவினங்களைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது ரூபா 482,015 தொகை திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. | நிர்வாகச் செலவினத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 482,015 தொகையான அலுவலக உபகரணங்கள் மற்றும் காகிதாதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இது வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட விரும்புகின்றேன். | நிதிய நடவடிக்கைகளிற்காக திணைக்களத்தால் ஏற்கப்படும் பொதுச் செயற்பாட்டுச் செலவினத்தைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 30 பொலிஸ் நிலையங்களிற்கு உரித்தான நீதவான் நீதிமன்றங்களால் அறவிடப்பட்டிருந்த ரூபா 11,656,250 தொகையான தண்டப்பணம் நிதியத்திற்குப் பெற்றுக்கொள்வதற்கு 2023 ஏப்ரல் 10 ஆம் திகதி கணக்காய்வுத் திகதி வரையிலும் இயலாதிருந்ததுடன் இது தொடர்பாக | பொலிஸ் நிலையங்களில் இருந்து வெகுமதி பெற்றுக்கொள்வதற்கான அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த நீதவான் நீதிமன்றங்களில் இருந்து அத் தொகை அனுப்பிவைக்கப்பட்டிருக்காமையால் இதற்காக கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. பொலிஸ் நிலையங்களின் மூலம் பெயர்ப் பட்டியல் அனுப்பிவைக்கப்படுகையில் பொலிஸ் உத்தியோகத்தர்களின் | நீதவான் நீதிமன்றத்திற்கும் பொலிஸ் நிலையத்திற்கும் இடையே போதிய தொடர்புடன் குறித்த தொகை முழுமையாகவும் விரைவாகவும் பெறப்பட்டு வெகுமதியை வழங்குவதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நீதவான் நீதிமன்றத்திற்கும் பொலிஸ் நிலையத்திற்கும் இடையே போதியளவு தொடர்பு இன்மை இதற்குக் காரணமாகியிருந்தது. | பெயர்களில் முதல் எழுத்துக்கள் இன்மையாலும், பகுதியளவில் பெறப்படும் தண்டப்பணம் முற்றாகப் பெறப்படும் வரையிலும் வெகுமதியை வழங்க முடியாதிருந்தது. | எடுக்கப்பட வேண்டியதுடன் செலுத்தப்பட வேண்டிய தொகை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | | ரூபா | | |
| (அ) | 1981 இன் 57 ஆம் இலக்க கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் 31(ஊ) பிரிவின் படி ஸ்தாபிக்கப்பட்ட கரையோரப் பாதுகாப்பு வெகுமதி நிதியத்தின் வெகுமதியைச் செலுத்துவதற்கான வழிகாட்டல் மற்றும் உப பரிமாணங்களின் 1 ஆவது வழிகாட்டல் | இவ் வெகுமதி நிதியத்திற்கு 2014 முதல் 2022 ஆம் ஆண்டு வரை செலவு வைக்கப்பட்ட ரூபா 13,214,810 தொகையான தண்டப்பணத்தில் வெகுமதிக்காக செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா 6,607,405 ஆன போதிலும் இதில் ரூபா 3,232,155 தொகையைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நீதவான் நீதிமன்றத்தின் மூலம் பகுதியளவில் செலுத்தப்பட்ட குற்றவாளிகளுக்கு விதிக்கப்பட்ட தண்டப்பணம் முழுமையாக நிதியத்திற்குச் செலவு வைக்கப்படும் வரை குறித்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட முடியாதிருந்ததுடன் பொலிஸ் உத்தியோகத்தர்களின் பெயர்ப் பட்டியலும் பெறப்பட்டிருத்தல் வேண்டும். | நீதிமன்றத்தினால் குறித்த தண்டப்பணம் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் பெயர்ப் பட்டியல் முறைப்படி பெறப்பட்டு வெகுமதித் தொகையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 2020/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | | | |
| | (i) 15(1) (இ) மற்றும் (ஈ) பந்தி | நுதியத்திற்காக சுற்றறிக்கையின் பிரகாரம் பாதீட்டுப் பதிவேடு ஒன்று தயாரிக்கப்பட்டு திறைசேரியின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் பாதீட்டுப் பதிவேடு தயாரிக்கப்பட்டு தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக | அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 3(2) (ஈ) மற்றும் (ஊ) | கணக்காண்டு முடிவுற்று 2 மாதங்களிற்குள் நிதியம் தொடர்பான செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு அரசாங்க நிதித் திணைக்களத்திற்கு ஓர் பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்கப்படுவதற்கும் வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கும் ஆரம்பம் முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | நிதிக்கூற்றுக்களுடன் வரைவு வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படுவதற்கும் இதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நீதிமன்றத்தால் குற்றவாளிகளிடம் இருந்து அறவிடப்படும் சகல தண்டப்பணம், நிதியத்தினால் அறவிட்டுக்கொள்வதற்கும், அவ்வாறு அறவிடப்படும் பணம் குறித்த தரப்பினருக்கு வெகுமதியாகப் பெற்றுக்கொள்வதற்கும் நீதவான் நீதிமன்றத்திற்கும் பொலிஸ் திணைக்களத்திற்கும் இடையே தகவல் பரிமாற்றப்படும் முறையான முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக நீதிமன்றங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய தண்டப்பணம் மற்றும் வெகுமதியை வழங்கவேண்டிய நபர்களை எளிதாகவும் விரைவாகவும் இனங்கண்டு குறித்த தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய 40 சதவீத தண்டப்பணத்தொகையும் உரிய நேரத்தில் அனுப்பிவைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்படுவது பொலிஸாரால் மேற்கொள்ளப்படுவதனால் வெகுமதி வழங்கப்பட வேண்டிய நபர்களின் பெயர்ப்பட்டியல் குறித்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் அனுப்பிவைக்கப்பட வேண்டும். தண்டப்பணம் நீதிமன்றத்தால் இத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த பொலிஸ் நிலையம் தொடர்பாக அறிக்கையிடப்பட்டிராமையால் இது தொடர்பாக வேறாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வெகுமதி வழங்கப்பட வேண்டும்.<br><br>நீதி அமைச்சினால் சகல நீதவான்களுக்கும் வெகுமதியைச் செலுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கும் படி அறிவிக்கப்பட்டுள்ளது. | நீதவான் நீதிமன்றங்களுக்கும் பொலிஸ் திணைக்களத்திற்கும் இடையே தகவல்களைப் பரிமாற்றிக்கொள்வதற்காக முறையான நடவடிக்கை தயாரிக்கப்பட்டு வெகுமதித் தொகையும் திறைசேரிக்குச் செலுத்தப்பட வேண்டிய பணமும் உரிய நேரத்தில் செலுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |